கவனிக்க.- 2023.03.10 ஆந் திகதிய 2323 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2324 - 2023 මාර්තු මස 17 වැනි සිකුරාදා - 2023.03.17

*2324 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *402* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *409* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மாச்சு மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

399-B 82437-5,413 (2023/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது)
பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவராக அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, சித்திரை மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, பங்குனி 01.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அம்பாறை | தெஹிஅத்தகண்டி | அம்பாறை மாவட்டத்தின் புதிய மெதகம பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிந்தென்ன பற்று தெற்கு பிரிவின் விவாகப் பதிவாளர் பதவி (கண்டிய/ பொது) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அம்பாறை. |

*03-165*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழிமூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ஏ. எம். ஆர். எஸ். கே. அமரகோன்,
பதிவாளர் நாயகம் (பதில்).

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2023, பெப்புருவரி 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | மகியங்கனை | பிந்தென்ன பஹரகம்மன/ மாபாகட பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை. |

03-166

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு**

சுகாதார அமைச்சு

**இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2023**

அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் என்ற தலைப்பில் அமப /22/1784 /605/011-1 ஆம் இலக்க மற்றும் 2022.11.08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் 2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆந் திகதிய இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக ஆயுர்வேத திணைக்களத்தின் வைத்திய உத்தியோகத்தர் வகையின் ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் பிரகாரம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை 2023.02.01 ஆந் திகதியில் பூர்த்திசெய்யும் தகைமை பெற்றவர்களைத் தெரிவு செய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம" என்னும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்களால் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்களால் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2023.03.31 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்பத்திரம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்ததாக அல்லது தாமதமானதாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஆயுர்வேத / சித்தாயுர்வேத/ யூனானிப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் ஏற்புடைய ஆண்டுகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் திறமைப் பட்டியலின் வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். ஆண்டுகள் சிலவற்றுக்கு ஏற்புடைய பட்டதாரிகள் விண்ணப்பதாரர்களாக முன்வரும் சந்தர்ப்பங்களில் அவ்வந்த ஆண்டுகளின் திறமைப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு அந்த திறமை பட்டியலில் குறிப்பிடப்பட்ட வரிசைக் கிரமத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட சாதாரண நேர்முகப் பரீட்சை சபை மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ஏற்புடைய ஆட்சேர்ப்புக்கள் 2022.12.31 இல் ஆயுர்வேதம், சித்தாயுர்வேதம் மற்றும் யூனானி ஆகிய வைத்திய உத்தியோகத்தர் பதவிகள் தொடர்பாக ஓய்வுபெற்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினர் (62) ஆட்சேர்க்கப்படுவதனால் அதன் விகிதாசார எண்ணிக்கையில் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2. **ஆட்சேர்க்கப்படும் தரம்** : இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் ஆரம்ப தரம்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்த நியமனம் ஓய்வூதிய சம்பளத்துக்கு உரித்துடையது. உங்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியானத் தீர்மானத்துக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று ஆண்டு கால (03) தகுதிகாண் காலத்துக்கு உட்படுவதுடன் ஆரம்ப தர பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட பின்னர், இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் காட்டப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக பதவியுயர்த்தப்படுவார்கள் ;

(iii) புதிதாக நியமனம் பெறுபவர்கள் அவர்களின் திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்களுக்கு இணைப்புச் செய்யப்படுவதுடன் ஆரம்ப நியமனத்தின் பிரகாரம் கடமைகளைப் பொறுப்பேற்கும் உத்தியோகத்தர்கள் தமது ஆரம்ப சேவை நிலையத்தில் மூன்றாண்டு கால (03) கட்டாய தகுதிகாண் காலம் நிறைவடையும் வரை கடமை புரிதல் வேண்டும். அக்கால எல்லைக்குள் இடமாற்றங்கள் எதிர்பார்க்கப்படக் கூடாது என்பதுடன் இக்கால எல்லைக்குள் இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், 2199/10 ஆம் இலக்க மற்றும் 2020, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் உள்ளடங்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அரசின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்பட்டுள்ளது.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இப் பதவிக்கு ரூபா 52,955.00 - 3 x 1,335 - 7 x 1,345 - 2 x 1,630 - 16 x 2,170 - ரூ. 1,04,355.00 (SL-2-2016) மாதாந்த சம்பள அளவு உரித்தாகும்.

5. **வயதெல்லை**.- 2023.02.01 இல்
ஆகக்குறைந்த வயதெல்லை : 22 வருடங்கள்
ஆகக்கூடிய வயதெல்லை : 45 வருடங்கள்

6. **தகைமைகள்**.-

i. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான ஐந்தாண்டு கால பட்டம் பெற்ற பின்னர் ஓராண்டு கால வைத்தியசாலை உள்ளக சேவைக்காலப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

ii. **தொழில் தகைமைகள்** : இலங்கை ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழைப் பெற்றிருத்தல்.

iii. **அனுபவம்** : ஏற்புடையதாகாது.

iv. **உடல் தகைமை** : ஒவ்வொரு அபேட்சகரும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்குமான போதியளவு உடல் ரதீயான மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

v. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக காணப்படல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை மற்றும் தேவையான உடலியல் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியில் அந்த தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

7. **அபேட்சகர்களின் ஆளடையாளம்**.- எல்லா வகையிலும் பூர்த்தியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களில் ஒன்று அல்லது அனைத்தும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கோரப்படும் போது சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தயாராக இருத்தல் வேண்டும்:

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) விவரமான பட்டப்படிப்புச் சான்றிதழ் ;
(iii) ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் ;
(iv) பிரதேச செயலாளரினால் இணை ஒப்பமிடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
(v) தேசிய ஆள் அடையாள அட்டை.

8. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவம் 22×29 செ. மீ. அளவிலான A4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் இலக்கம் 01 முதல் இலக்கம் 07 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், இலக்கம் 08 முதல் இலக்கம் 10 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு ஏற்புடைய தகவல்கள் தனது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். ஏற்புடைய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியினை www.ayurveda.gov.lk மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் போலியானது என ஆட்சேர்க்கப்படுவதற்கு முன்னர் தெரியவருமாயின் உங்களது அபேட்சகராண்மை அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறான போலியான தகவல் ஒன்று ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் தெரியவருமாயின் அது தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுவதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவுக்குரியதாகும்.

11. இந்த அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

2023, மாச்சு 17.

அலுவலக உபயோகத்துக்காக மட்டும் ☐

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் ஆயுர்வேதத் திணைக்களத்தின் வைத்திய உத்தியோகத்தர் வகையின் ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

01. (i) (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :...............................................
...............................................
(ஆ) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :...............................................
...............................................

(ii) (அ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :...............................................
...............................................
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :...............................................
...............................................

02. (i) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
(கடிதம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)
...............................................
...............................................

(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
...............................................
...............................................

03. (i) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) 2023.02.01 இல் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

04. பெண்/ஆண் பாலினம் பெண் : ☐ ஆண் : ☐
(ஏற்புடைய கூட்டில் X அடையாளமிடவும்)

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? விவாகமானாவர் ☐ விவாகமாகாதவர் ☐
(ஏற்புடைய கூட்டில் X அடையாளமிடவும்)

06. இலங்கைப் பிரசையா என்பது பற்றி : ...............................................

07. நிரந்தர வதிவிடம் உரித்தாகும்

(i) மாகாண சபை :.................................

(ii) மாவட்டம் :.................................

(iii) பிரதேச செயலாளர் பிரிவு :.................................

08. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

09. கல்வித் தகைமைகள் :
பட்டம் தொடர்பான விபரம் :

பீ. ஏ. எம். எஸ். (BAMS) ☐ பீ. யூ. எம். எஸ். (BUMS) ☐ பீ. எஸ். எம். எஸ். (BSMS) ☐

(ஏற்புடைய கூட்டில் X அடையாளமிடவும்)

(1) பல்கலைக்கழகம் :..........................................

(2) பட்டம் செல்லுபடியாகும் திகதி :..........................................

(3) வகுப்பு :..........................................

(4) பட்டத்தைப் பூர்த்தி செய்த மொழி மூலம் :..........................................

(5) உள்ளகப் பயிற்சி பெற்ற ஆண்டு :..........................................

10. ஆயுர்வேத வைத்திய சபையின் பதிவு தொடர்பான விபரம் :

(1) இலக்கம் :..........................................

(2) ஆண்டு :..........................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். நான் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விபரம் உண்மைக்குப் புறம்பானதென அல்லது பிழையானதென நியமன அதிகாரிக்கு தெரியவருமாயின் அதன் காரணமாக நான் அப்பதவிக்குப் பொருத்தமற்றவராக கருதப்படுவதற்கும், எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாமல் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................................
கையொப்பம்.

திகதி :....................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ............................. (முழுப் பெயர்) என்பவரை எனக்கு தனிப்பட்ட ரீதியில் தெரியும் எனவும் ...................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

................................................
கையொப்பம்
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்.)

திகதி :....................

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவரெனில் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானதெனவும் அவரின் பணிகள் மற்றும் நடத்தை ............................. எனவும் நான் உறுதிசெய்கின்றேன். அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

................................................
கையொப்பம்
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்.)

திகதி :....................

*03-564*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

*இலங்கை அதிபர் சேவையில் 2 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2023*

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக்குறிப்பு பிரகாரம், இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கம் அப/21/1824/308/139 மற்றும் 2021.11.23 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலக்கம் அப /12/1101/530/035 மற்றும் 2012.08.08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையில் 2 ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2023, யூன் மாதம் கொழும்பில் நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றது.

02. இந்தப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குகள் இலக்கம் 1885/31 கொண்ட 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன விண்ணப்ப தாரர்களின் வசதிக்காக பாடத்திட்டம் (அட்டவணை 01) மற்றும் பிற ஒழுங்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை நடைமுறை.- வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை பாடங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அட்டவணை 01)

| பாட இலக்கம் | பாடம் | நேரம் | புள்ளி | தேர்ச்சி பெற குறைந்தபட்ச புள்ளிகள் தேவை |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | 3 மணி நேரம் | 100 | 40 |
| 02 | பாடசாலை திட்டமிடல் | 3 மணி நேரம் | 100 | 40 |
| 03 | கல்வியில் புதிய போக்குகள் மற்றும் நடைமுறைகள் | 3 மணி நேரம் | 100 | 40 |

**பாடத்திட்டம் .-**

(i) **பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை.-** ஒரு பாடசாலையின் நிர்வாகத்தில் அதிபரின் வகிபாகம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும்

சோதிக்க கேள்விகள் சேர்க்கப்படும். பாடசாலை முகாமைத்துவ முறைகள், கால அட்டவணை திட்டமிடல், பொறுப்பு பகிர்வு, பாடசாலை அபிவிருத்தியில் பொதுமக்களின் பங்களிப்பு, பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம், பாடசாலை சார்ந்த ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன், மாணவர் நேய பாடசாலை எண்ணக்கரு, மாணவர் மையக் கல்வி முதலியன குறித்த அறிவு சோதிக்கப்படும்.

(ii) **பாடசாலை திட்டமிடல்.**- அபிவிருத்தியின் வழிகோலி என்பதாக அதிபர்களின் வகிபாகம் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் சோதிக்க கேள்விகள் சேர்க்கப்படும். பாடசாலை முகாமைத்துவ சபை, பாடசாலையின் நோக்கு மற்றும் பணி, பாடசாலை தகவல் சார்ந்த திட்டமிடல், உறுதியான திட்டங்கள், நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்கள், வருடாந்த செயல்பாட்டுத் திட்டங்கள், பாடசாலை வலையமைப்பு மற்றும் வள திட்டமிடல், பிரதேச அபிவிருத்தியில் பாடசாலையின் பங்களிப்பு முதலியன பற்றிய அறிவு சோதிக்கப்படும்.

(iii) **கல்வியில் புதிய போக்குகள் மற்றும் நடை முறைகள்.**- கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புது எண்ணக்கருக்கள் , அனுபவ கற்றல், தர்க்கரீதியான சிந்தனை , கல்வியில் சமத்துவம் , விசேட தேவைகள் கொண்டோருக்கான கல்வி, முறைசாரா கல்வி, வளர்ந்தோர் கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி , தேர்ச்சி மைய கல்வி, வாழ்க்கைக்கான கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் முதலிய விடயங்கள் பற்றிய அறிவு சோதிக்கப்படும்.

03. **பரீட்சை மொழி ஊடகம்** .- பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஒரு மொழியில் மட்டுமே தோற்ற வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி ஊடகத்தை மாற்ற அனுமதிக்கப்படுவதில்லை.

04. பரீட்சைக்கு தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்படும். இதன் பிரகாரம் www.moe.gov.lk கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் முடிவுகள் வெளியிடப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேறுகளை வழங்கமாட்டார்.

05. இந்த அறிவிப்பின் முடிவில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதல் பக்கத்திலும் எஞ்சியன இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு தயார் செய்து அதற்கான தகவல்களைத் தெளிவாக சுய கையெழுத்தில் உள்ளிடவும். மாதிரி விண்ணப்பப் படிவத் துடன் முரண்படுகின்ற விண்ணப்பங்கள், முழுமையற்ற தகவல் குறிப்பிட்ட விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் புகைப்பட பிரதியை மற்றும் பரீட்சைக் கட்டணம் தொடர்பான ரசீதின் புகைப்பட பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதை அறியத்தருகின்றோம். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரர் தேடிப்பார்க்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றோம். விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்தையும் தமிழ் மொழி மூல விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்தையும் பயன்படுத்த வேண்டுமென அறியத்தருகின்றோம்.

போலியான தகவல்களுக்கு தண்டனை :- விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது கவனமாக துல்லியமான தகவலைவழங்கவேண்டும்.இந்துப்பரீட்சைவிதிகளின்பிரகாரம் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவராகக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பிறகு அல்லது எந்த நேரத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்து ரத்துச் செய்யப்படலாம்.

06. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை நடத்தப்படுவதோடு அதை நடத்த அவர் வகுத்த விதிகளை பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டும். இந்த அறிவிப்பின் இறுதியில் பரீட்சைக்கான விதிமுறைகள் வெளியிடப் பட்டுள்ளன.

07. விண்ணப்பப் படிவம் 2023 ஏப்பிறல் மாதம் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் /வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது நிறுவனத் தலைவர் மூலம் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். இந்த திகதிக்குப் பிறகு கிடைக்கும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் .

08. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பித் துள்ளார்கள் என்ற அனுமானத்தின் பேரில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்குரிய ரசீதுடன் பிழையின்றி நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அவர்களுக்கு அறிவிக்கும் பத்திரிகை அறிவித்தலை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் வெளியிடும் . அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவிக்க வேண்டும். அத்தகைய

அறிவிப்பில், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சை பெயர் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியாயின் அந்த விபரங்களுடன் அனுமதி அட்டை பிரதி அனுப்ப வேண்டிய தொலைநகல் இலக்கத்துடன் சகிதமான கோரிக்கை கடிதம் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வைத்து உசாவுதல் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சைத் திணைக்களத்தின் விசாரணையின் போது தேவைப்பட்டால், விண்ணப்பதாரர் தனது அபேட்சகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் விண்ணப்ப பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதி மற்றும் விண்ணப்பம் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட ரசீதை தயாராக வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையதாக கருதப்படாது .

09. i. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவன தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சையின் முதல் தினத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை மண்டப பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் .

ii. மேலே பந்தி 8 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய தவறிய பரீட்சார்த்திகளின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தி அடையும் வண்ணம் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய வேண்டும் .

தங்கள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்ப தாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல், பரீட்சை முடிந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்** :

(அ) இந்தப் பரீட்சைக்கு செலுத்தும் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது என்பதோடு வேறு எந்த பரீட்சைக் கட்டணத்திற்கும் மாற்றப்படுவதற்கும் அனுமதியளிக்கப்படாது.

(ஆ) முழுப் பரீட்சை அல்லது அதன் பகுதிக்கு முதல் முறைக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(இ) அதன் பிறகு ஒவ்வொரு முறையும் செலுத்தும் கட்டணம் பின்வருமாறு :-

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்கு | : ரூ . 500.00 |
| ஒரு பாடத்திற்கு | : ரூ . 250.00 |

இந்த பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலுத்தப்படுமாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் / உப அஞ்சல் நியைத்திலும் செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட வேண்டும். ரசீதின் புகைப்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும்.

12. பரீட்சைகளை நடாத்துவதற்கும் முடிவுகளை வெளியிடு வதற்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்கள். அந்த விதிகளை மீறும் பட்சத்தில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டியிருக்கும் என்பதை அறியத் தருகின்றோம். மேலும், பரீட்சார்த்திகள் நாட்டில் தற்போதைய தனிமைப்படுத்தல் விதிகளை கடைபிடிக்க வேண்டும் .

13. சிங்கள மற்றும் தமிழ் மொழி ஊடகங்களில் வெளியிடப்படும் அறிவிப்புகளின் உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு இருந்தால், சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு செல்லுபடியாகும் .

14. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயத்தையும் தீர்மானிக்க கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரிமை உள்ளது.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய, பெலவத்த,
2023.03.08.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

இலங்கை அதிபர் சேவையில் 2 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2023

The Efficiency Bar Examination for Officers in Class 2 of the Sri Lanka Principals' Service and the officers appointed to Grade II in Class 2 of the Sri Lanka Principals' Service on supernumerary basis – 2023

(கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் / மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பவும். கடிதவுறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் .)

1. பரீட்சை மொழி ஊடகம்
(பெட்டியில் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்.)
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

2. (i) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில் ):
(உதா.: - HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
..................................................................

(ii) இறுதியில் எழுதப்பட வேண்டிய பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துகள் பின்னராக எழுதப்பட்ட பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் )
..................................................................
(உதா. - GUNAWARDHANA, H.M.S.K.)

(iii) முழுப் பெயர் ( சிங்களத்தில் /தமிழில் ) :
..................................................................

3. முகவரி
(i) தனிப்பட்ட : .................................................
(ii) அலுவலக : .................................................
(iii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:
..................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் )
(iv) தொலைபேசி இலக்கம் :
(அலுவலக)....................................................................

4. (i) அதிபர் சேவையின் வகுப்பு /தரம் : ................
(ii) மிகை ஊழியர் சேவை அடிப்படையில் :
ஆம் ☐ இல்லை ☐

(iii) பாடசாலை /அலுவலகம் : ...................................
(iv) மாகாண கல்வித் திணைக்களம் /
வலயக் கல்வி அலுவலகம் ...................................

5. (i) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பிறந்த திகதி :
ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) பெண் /ஆண் :
ஆண் - 0
பெண் -1 ☐
(தொடர்புடைய இலக்கத்தை பெட்டியில் எழுதவும் )

6. தொலைபேசி இலக்கம்:
☐☐☐☐☐☐☐☐☐☐

7. வர்த்தமானி அறிவிப்பின் பத்தி 02 (அ) இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்க வேண்டிய பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் | விண்ணப்பிக்கும் பாட இலக்கம் |
|---|---|---|
| பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | 01 | |
| பாடசாலை திட்டமிடல் | 02 | |
| புதிய கல்வி போக்குகள் மற்றும் நடைமுறைகள் | 03 | |

பெட்டியில் தொடர்புடைய பாட இலக்கம் /இலக்கங்களை எழுதவும்.

8. இதற்கு முன் இலக்கம் 1086/26 மற்றும் 1999.07.02 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப நடைபெற்ற வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பாடத்தில் சித்தி பெற்ற உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 33/2014 பிரகாரம் இந்த 2 ஆவது தடைதாண்டலில் பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பாடத்தில் சித்தி பெற வேண்டிய

சந்தர்ப்பத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். அந்த பாடத்தில் சித்தி பெற்றிருந்தால் வருடம், பெறுபேறு மற்றும் மொழி ஊடகத்தை குறிப்பிடுக.

| பாடம் | வருடம் | பெறுபேறு | மொழி ஊடகம் |
|---|---|---|---|
| கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | | | |

9. பரீட்சைக் கட்டணம் :-

(i) கட்டணம் செலுத்திய அஞ்சல் /உப அஞ்சல் நிலையம்: ...................................................................

(ii) செலுத்தப்பட்ட தொகை : ....................................

(iii) செலுத்தப்பட்ட திகதி : ..........................................

(iv) ரசீது இலக்கம் : ......................................................

ரசீதின் ஓரங்களில் ஒன்றை கழன்று விடாதவாறு ரசீதை இங்கே ஒட்டவும். (ரசீதின் பிரதியை கையில் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

10. மேலே உள்ள தகவல்கள் சரியானவை என்று உறுதியளிக்கிறேன். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு நான் உடன்படுகிறேன்.

.................. ......................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர் எனது கோட்டம்/ வலயம் / மாகாண உத்தியோகத்தர் என்றும் இன்றைய தினம் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். மேலும், விண்ணப்பதாரருக்கு பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை /விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்திற்கான ரசீதை முறையாக ஒட்டியுள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................

கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் கையொப்பம்.

முகவரி : ........................

திகதி: ................................

(அதிகாரபூர்வ முத்திரையால் சான்றளிக்க)

(பொருந்தாத வார்த்தைகளை வெட்டுக.)

03- 191/1

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையில் 3 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2023

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பு பிரகாரம், இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கம் அப/21/1824/308/139 மற்றும் 2021.11.23 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலக்கம் அப /12/1101/530/035 மற்றும் 2012.08.08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையில் 3 ஆம் வகுப்புக்கு மிகை ஊழியர் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2023, யூன் மாதம் கொழும்பில் நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றது.

02. இந்தப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குகள் இலக்கம் 1885/31 தாங்கிய 2014.10.22 திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பரீட்சை ஒழுங்குகள் (அட்டவணை 01) மற்றும் பாடத்திட்டம் (அட்டவணை 02) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

( அ ) ( அட்டவணை 01) - பரீட்சை ஒழுங்குகள்

| பாட இலக்கம் | பாடம் | நேரம் | புள்ளி | தேர்ச்சி பெற தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தாபனக் கோவை ஒழுங்குகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயல் ஒழுங்கு விதிகள் | 2 மணி நேரம் | 100 | 40 |
| 02 | பாடசாலை களில் நிதி நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குகள் | 2 மணி நேரம் | 100 | 40 |

(ஆ) (அட்டவணை 02) - பாடத்திட்டம்

| பாட இலக்கம் | பாடம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | தாபனக் கோவை ஒழுங்குகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயல் ஒழுங்கு விதிகள் | தாபனக் கோவை அத்தியாயங் களில் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII,XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII எனும் அத்தியாயங்கள் மற்றும் 2310/29ஆம் இலக்க 2022.12.14ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் குறித்ததான அறிவு சோதிக்கப்படும். |
| 02 | பாடசாலை களில் நிதி நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குகள் | பாதீட்டு மதிப்பீட்டு நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிதிப் பொறுப்புகள் வழங்குதல், நிதி பொறுப்பேற்பு கணக்கிடல் மற்றும் பெற்றுக்கொள்ளல்கள், கொடுப்பனவுகள், பொதுப் பணத்தின் பாதுகாப்பு, முன்பணம் மற்றும் வங்கிக் கணக்குகள், பணிகள் மற்றும் சேவைகள், பொருட்களின் கணக்கெடுப்பு, கணக் காய்வு வினவல்கள், அரச அலுவலகங்களில் பயன் படுத்தப்படும் லெட்ஜர்கள், வருமானம் மற்றும் செலவு சுருக்கங்கள், வங்கி கணக்கு ஒப்பீடு, செலுத்தப்படாத ஊதியங்கள், கடமை தொலைபேசிகள் தொடர் பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் நிதி விதிமுறைகள் குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக் கைகள் பற்றிய பொதுவான விளக்கம் சோதனை செய்யப்படும். |

03 **பரீட்சை மொழி ஊடகம்** :- பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஒரு மொழியில் மட்டுமே தோற்ற வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி ஊடகத்தை மாற்ற அனுமதிக்கப்படுவதில்லை.

04. பரீட்சைக்கு தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்படும். இதன்பிரகாரம் www.moe.gov.lk கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் முடிவுகள் வெளியிடப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வழங்கமாட்டார்.

05. இந்த அறிவிப்பின் முடிவில் காட்டப்பட்டுள்ள மாதிரி பிரகாரம் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதல் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு தயார் செய்து அதற்கான தகவல்களைத் தெளிவாகச் சுய கையெழுத்தில் உள்ளிடவும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் முரண்படுகின்ற விண்ணப்பங்கள், முழுமையற்ற தகவல் குறிப்பிட்ட விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதியை மற்றும் பரீட்சைக் கட்டணம் தொடர்பான பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதை அறியத்தருகின்றோம். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கு அமைவானதா என்பதை விண்ணப்ப தாரர் தேடிப்பார்க்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றோம். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்தையும் தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்தையும் பயன்படுத்த வேண்டுமென அறியத்தருகின்றோம்.

**போலியான தகவல்களுக்கு தண்டனை**:- படிவத்தை பூர்த்தி செய்யும் போது கவனமாக துல்லியமான தகவலை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சை விதிகளின் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவராகக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பிறகு அல்லது எந்த நேரத்திலும் பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படலாம்.

06. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை நடாத்தப்படுவதோடு அதை நடத்த அவர் வகுத்த விதிகளை பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டும்.இந்த அறிவிப்பின் இறுதியில் பரீட்சைக்கான விதிமுறைகள் வெளியிடப் பட்டுள்ளன.

07. விண்ணப்பப்படிவம் 2023, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு கோட்டக்

கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது நிறுவனத் தலைவர் மூலம் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். இந்த திகதிக்குப் பிறகு கிடைக்கும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

08. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் பேரில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்குரிய ரசீதுடன் பிழையின்றி நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அவர்களுக்கு அறிவிக்கும் பத்திரிகை அறிவித்தலை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவிக்க வேண்டும். அத்தகைய அறிவிப்பில், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை எண் மற்றும் விண்ணப்பித்த பரீட்சை பெயர் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியாயின் அந்த விபரங்களுடன் அனுமதி அட்டை பிரதி அனுப்ப வேண்டிய தொலைநகல் இலக்கத்துடன் சகிதமான கோரிக்கை கடிதம் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வைத்து உசாவுதல் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சைத் திணைக்களத்தின் விசாரணையின் போது தேவைப்பட்டால், விண்ணப்பதாரர் தனது அபேட்சக தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் விண்ணப்பபிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய ரசீது பிரதி மற்றும் விண்ணப்பம்அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட ரசீதை தயாராக வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்குத்தோற்றுவதற்கு தகுதியுடையதாக கருதப்படாது.

09 . i விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவன தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சையின் முதல் தினத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை மண்டப பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றஅனுமதிக்கப்படமாட்டார்கள்.

ii. மேலே பந்தி 8 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய தவறிய பரீட்சார்த்திகளின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தி அடையும் வண்ணம் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கும் வண்ணம் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய வேண்டும்.

தங்கள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல், பரீட்சை முடிந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) இந்தப் பரீட்சைக்கு வசூலிக்கப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது என்பதோடு வேறு எந்த பரீட்சைக் கட்டணத்திற்கும் மாற்றப்படுவதற்கும் அனுமதியளிக்கப்படாது.

(ஆ) முழு பரீட்சை அல்லது அதன் பகுதிக்கு முதல் முறைக்கு கட்டணம் வசூலிக்கப்படாது.

(இ) அதன் பிறகு ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் கட்டணம் பின்வருமாறு.

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்கு | : ரூ . 500/- |
| ஒரு பாடத்திற்கு | : ரூ . 250/- |

இந்த பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு செலுத்தப்படுமாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் / உப அஞ்சல் நியைத்திலும் செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாவாறு ஒட்டப்பட வேண்டும். ரசீதின் புகைப்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும்.

12. பரீட்சைகளை நடத்துவதற்கும் முடிவுகளை வெளியிடுவதற்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்கள். அந்த விதிகளை மீறும் பட்சத்தில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டியிருக்கும் என்பதை அறியத்தருகின்றோம். மேலும், பரீட்சார்த்திகள் நாட்டில் தற்போதைய தனிமைப்படுத்தல் விதிகளை கடைபிடிக்க வேண்டும்.

13. சிங்கள மற்றும் தமிழ் மொழி ஊடகங்களில் வெளியிடப் படும் அறிவிப்புகளின் உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு இருந்தால், சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு செல்லுபடியாகும்.

14. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத எந்தவொரு விஷயத்தையும் தீர்மானிக்க கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரிமை உள்ளது.

எம்.என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு
பெலவத்த, இசுருபாய,
2023.03.08.

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கை அதிபர் சேவையில் 3 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஊழியர் சேவை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2023

The Efficiency Bar Examination for Officers in Class 3 of the Sri Lanka Principals' Service and the officers appointed Class 3 of the Sri Lanka Principals' Service on supernumerary basis – 2023

(கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் / மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பவும். கடிதவுறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.)

1. பரீட்சை மொழி ஊடகம்
(பெட்டியில் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்.)

சிங்களம் -2
தமிழ் - 3 ☐

2. (i) முழுப் பெயர் ( ஆங்கிலபெரிய எழுத்துக்களில்): ...........
.................................................................................
(உதா. :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் எழுதப்பட வேண்டிய பெயர் முதலிலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துகள் பின்னராக எழுதப்பட்ட பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ………………………………………………
(உதா – GUNAWARDHANA, H.M.S.K)

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) ……………… ………………………

3. முகவரி
i. தனிப்பட்ட: …………………………………………
ii. அலுவலக: …………………………………………
iii. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி: ………
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் )
iv. தொலைபேசி இலக்கம்: (அலுவலக)..............................

4. i. அதிபர் சேவையின் வகுப்பு /தரம் : ................
ii. மிகை ஊழியர் சேவை அடிப்படையில்:

ஆம் ☐ இல்லை ☐

iii. பாடசாலை/அலுவலகம் :.....................................
iv. மாகாண கல்வித் திணைக்களம் /
வலயக் கல்வி அலுவலகம் ...............................

5. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(ii) பிறந்த திகதி:
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) பெண் /ஆண் :
ஆண் - 0
பெண் -1 ☐
(தொடர்புடைய எண்ணை பெட்டியில் எழுதவும் )

6. தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

7. வர்த்தமானி அறிவிப்பின் பந்தி 02 (அ) இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பாடஇலக்கத்துடன் விண்ணப்பிக்க வேண்டிய பாடங்கள்

| பாடம் | பாட இலக்கம் | விண்ணப்பிக்கும் பாட இலக்கம் |
|---|---|---|
| தாபனக் கோவை ஒழுங்குகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் ஒழுங்கு விதிகள் | 01 | |
| பாடசாலைகளில் நிதி நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குகள் | 02 | |

பெட்டியில் தொடர்புடைய பாட இலக்கம்/ இலக்கங்களை எழுதவும்.

8. பரீட்சைக் கட்டணம் :-

(i) கட்டணம் செலுத்திய அஞ்சல் / உப அஞ்சல் நிலையம்:- ............

(ii) செலுத்தப்பட்ட தொகை :- ..................

(iii) செலுத்தப்பட்ட திகதி:-........

(iv) ரசீது இலக்கம்:- ................................

| |
|---|
| ரசீதின் ஓரங்களில் ஒன்றை கழன்று விடாதவாறு ரசீதை இங்கே ஒட்டவும். (ரசீதின் பிரதியை கையில் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்) |

9. மேலே உள்ள தகவல்கள் சரியானவை என்று உறுதியளிக்கிறேன். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு நான் உடன்படுகிறேன்.

| .................. | ....................................... |
|---|---|
| திகதி | விண்ணப்பதாரரின் கையொப்பம் |

10. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர் எனது கோட்டம்/ வலயம் / மாகாண உத்தியோகத்தர் என்றும் இன்றய தினம் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். மேலும், விண்ணப்பதாரருக்கு பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை /விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணத்திற்கான ரசீதை முறையாக ஒட்டியுள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................

கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் .

முகவரி : ........................

திகதி: ................................

(அதிகாரபூர்வ முத்திரையால் சான்றளிக்க)

(பொருந்தாத வார்த்தைகளை வெட்டுக.)

03-191/2